Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

14.06.2020 ஞாயிற்றுக்கிழமை தொடர்புக்கு 076 584 2222

## புதினம் ? தெரியுமோ

கிழக்கில தொல்பொருள்களைப் பாதுகாக்க ஜனாதிபதி செயலணி ஒண்டு அமைச்சது எல்லாருக்கும் தெரிஞ்ச சங்கதிதான். அந்தச் செயலணியில மருந்துக்குக் கூட ஒரு தமிழரின்ர பேரும் இல்லை. ஆனால் கிழக்கில பெரும்பான்மை தமிழர்கள் தான். அப்பிடி நிலைமை இருக்கேக்க , இப்பிடி வெளிப் படையா இனவாதத்தோட கிழக்கு மாகாணத்தை பௌத்த நிலமா மாத்துறத்துக்குதான் சிங்கள ஆக்களை செயலணிக்குள்ள போட்டு வேலை நடக்கப் போகுது. இதைப் பற்றி அரசோட நெருக்க மான தமிழ் அரசியல்வாதி ஒருத்தர் கடுமையாத் துள்ளிச் பக்.6

## யாழ்ப்பாணத்தில் தேர்தல் ஒத்திகை



யாழ்ப்பாணம், ஜூன் 14

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு ஒத்திகை நடைபெற்றது. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கான ஒத்திகை இன்று நாவாந்துறையில் இடம்பெற்றது. நாவாந்துறை றோமன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாகியது. பக்.2

# ஜனாதிபதி செயலணி வடக்கையும் விழுங்கும்?

கொழும்பு, ஜூன் 14

கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் பிரதேசங்களைக் கண்காணிப்பதைப்போன்று வடக்கு மாகாணத்திலும் தொல்பொருள் பிரதேசங்களைக் கண்காணிக்கும் பொறுப்பை ஜனாதிபதி செயலணிக்கு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. பக்.2

## தேர்தல் சுவரொட்டிகளை அகற்றுகின்றது பொலிஸ்

கொழும்பு, ஜூன் 14

பொதுத்தேர்தலுடன் தொடர்புடைய சட்டவிரோத பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் போன்றவற்றை அகற்றும் நடவடிக்கைகள் பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நியாயமானதும் சுதந்திர மானதுமான தேர்தலை பக்.2

## கோத்தாபயவின் ஆட்சியில் தமிழ், முஸ்லிம்கள் அச்சம்!

முன்னாள் அமைச்சர் மங்கள சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன் 14

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான இந்த ஆட்சியில் தமிழ், முஸ்லிம் மக்கள் பக்.2

## இக்கட்டில் சஜித் அணி!

கொழும்பு, ஜூன் 14

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்குள் நெருக்கடி நிலைமை தீவிரமடைந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. பொதுத்தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தக் பக்.2

## விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன்.14

கடந்த 12ஆம் திகதி விபத்தில் சிக்கிச் சிகிச்சைபெற்று வந்த முதியவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். கோப்பாய் தெற்கைச் சேர்ந்த சந்திரசேகர் சரவணமுத்து (வயது80) என்பவரே உயிரிழந்துள்ளார். பக்.2



## கொரோனா கட்டுப்பாட்டில்!

### கடற்படைத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

இலங்கையில் முழுமையாக கொரோனா வைரஸ் பரவல் தடுக்கப்பட்டுள்ளது என்று கடற்படை தளபதி பியல் டி சில்வா தெரிவித்துள்ளார். இலங்கை கடற்படையினர் மட்டத்தில் பரவிவந்த கொரோனா வைரஸ் பக்.2

## வெளிநாட்டில் இருந்து வந்த பெண்களுக்கு கொரோனா

கொழும்பு, ஜூன் 14

வெளிநாட்டில் இருந்து நாட்டுக்கு வந்த இரு பெண்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அவர்கள் தீவிர சிகிச்சைப் பக்.2

## தேர்தல் விஞ்ஞாபனத்தை 'மொட்டு' முன்வைக்காது!

பிரதான செயலாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

ஒகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கான, தேர்தல் விஞ்ஞாபனத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெளியிடாது என்று அதன் பிரதான செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். இதற்கு பதிலாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் 'சௌபாக்கிய நோக்கு' கொள்கைத்திட்டமே மக்களிடம் முன் பக்.2

## கடலட்டை பிடிப்பதற்கு எதிராகப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன.14

கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சால் வடமராட்சி கிழக்கில் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதைக் கண்டித்து நாளை வடமராட்சி கிழக்கில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப் படவுள்ளது. நாளை காலை 10:30 மணிக்கு பக்.2

## ஹெரோய்னுடன் இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன.14

நெல்லியடி நகர் பகுதியில் ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் இன்று மதியம் கைதுசெய்யப்பட்டுள்ள பக்.2

# ஜனாதிபதி செயலணி...

பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்னவின் தலைமையில் அடுத்தவாரம் கூடவுள்ள செயலணிக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்படவுள்ளது என்று கூறப்படுகின்றது.
ஜனாதிபதி நியமித்த விசேட ஜனாதிபதி செயலணி கிழக்கின் தொல்பொருள் பிரதேசங்களை முற்றுமுழுதாக கண்காணித்து அவற்றை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதை உறுதிப்படுத்தும் வகையில் கடந்த செயலணிக் கூட்டத்தில் சகல அதிகாரங்களும் செயலணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
தற்போது செயலணியின் பார்வை வடக்கு நோக்கி திரும்பியுள்ளது. வடக்கில் நாக விகாரை மற்றும் சில பகுதிகளிலும் தொல்பொருள் பிரதேசங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.
அனுராதபுரம் தூபராம விகாரை தொடக்கம் நாக விகாரை வரையில் சகல பகுதிகளையும் பாதுகாத்து நாட்டின் பாரம்பரியத்தை தக்க வைக்க வேண்டும் எனவும் செயலணியில் அங்கம் வகிக்கும் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார். (எ)

# யாழ்ப்பாணத்தில் தேர்தல் ஒத்திகை

அந்தப் பாடசாலையை வாக்களிப்பு நிலையமாகக் கொண்ட வாக்காளர்கள் 400 பேருக்கு வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்ட நிலையில் அந்த மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பு நிலையத்துக்கு வருகை தந்ததை அவதானிக்க முடிந்தது. நாடாளுமன்றத் தேர்தலைப் போன்றே முழுமையான ஏற்பாடுகளுடன் இந்தத் தேர்தல் நடைபெற்றது. சமூக இடைவெளி, முகக் கவசம், கைகளைக் கழுவுதல் போன்ற விடயங்களில் இதன்போது அதிக கவனம் செலுத்தப்பட்டது.
முன்னதாக பரீட்சார்த்த தேர்தலுக்கான தயார்ப்படுத்தல்கள் தொடர்பில், பொலிஸாருக்கான விளக்கங்கள் வழங்கப்பட்டன.அவர்களுடன் வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலர், கிராம அலுவர்கள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ப)

# கோத்தாபயவின்....

அச்சமான நிலையில் உள்ளார்கள். சட்ட ஆட்சி, ஜனநாயகம் என்று அனைத்துமே கேள்விக்குறியாகியுள்ளன.
இவ்வாறு சுட்டிக்காட்டினார் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர. இலங்கையின் தற்போதைய நிலவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோத்தாபய ராஜபக்ச குறுகிய காலத்தில் நாட்டில் ஏற்படுத்திய அழிவுகள், ஐக்கிய தேசியக் கட்சியின் பிளவுகள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொறுப்பற்ற தன்மை ஆகிய காரணங்களாலேயே நாடாளுமன்றத் தேர்தல் போட்டியிலிருந்து விலகினேன்.
ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்சவுக்கு வாக்களித்த நடுத்தர மக்கள், அவர் எந்த நோக்கத்தில் செல்கின்றார் என்பதை நன்குணர்ந்து சிந்திக்க ஆரம்பித்துவிட்டனர். கடும்போக்கு இனவாதிகளின் ஆர்ப்பரிப்பும் தலைதூக்கிவிட்டது. நாடு இராணுவத்தின் பிடிக்குள் சென்று கொண்டிருக்கின்றது.
வீழ்ந்திருந்த பொருளாதாரம் கொரோனா வைரஸால் மேலும் மோசமான நிலையை அடைந்துள்ளது. இவ்வாறான போக்கானது நாம் படிப்படியாக முன்னகர்த்திக்கொண்டிருந்த நாட்டை மீண்டும் பாதாளத்துக்குள் தள்ளிவிட்டுள்ளது. கோத்தாபயவின் இந்த ஆட்சியில் தமிழ், முஸ்லிம் மக்கள் அச்சமான நிலையில் உள்ளார்கள். சட்ட ஆட்சி, ஜனநாயகம் என்று அனைத்துமே கேள்விக்குறியாகியுள்ளன.
இவ்விதமான நிலைமைகளுக்கு எதிராக நிச்சயமாக வலுவான மக்கள் எழுச்சி ஏற்படும். அந்தச் சக்திக்கு மேலும் வலுச்சேர்க்க முற்போக்கான ஜனநாயகத்தின் மீது நம்பிக்கைகொண்ட அனைத்துத் தரப்புக்களையும் இன, மத, மொழி பேதமின்றி ஒன்றிணைக்க வேண்டும். அதுவே இந்த நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அடிப்படையாக அமையும். பொறுத்திருந்து பாருங்கள். இது எதிர்காலத்தில் நிகழும் என்றார். (எ-22)

# தேர்தல் சுவரொட்டிகளை....

நடத்தும் நோக்கில் இன்று முதல் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கைகள் தொடர்பில் கண்காணிக்குமாறு அனைத்து பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கும் பதில் பொலிஸ்மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார் என்றும் அவர் கூறினார். சட்டவிரோதமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதாகைகள் மற்றும் வாகனங்களில் ஒட்டப்பட்டுள்ள மற்றும் பொருத்தப்பட்டுள்ள பதாகைகளும் அகற்றப்படும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
இவ்வாறான பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் காணப்படும் பட்சத்தில் அது குறித்து அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்குமாறும் பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (எ)

# கொரோனா

முழுமையாக கட்டுப்பாட்டில் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மூடப்பட்டிருந்த வெலிசர கடற்படை முகாமை, சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைக்கமைய உடனடியாக திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது முகாமில் கொரோனா பரவல் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் முகாமை வெகு விரைவில் திறக்க முடியும். சமகாலத்தில் தனிமைப்படுத்தல் முகாம்களில் உள்ள ஓரிரு கடற்படைச் சிப்பாய்களே கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்படுகின்றனர். அவர்களைத் தவிர்த்து முகாமில் புதிய கொரோனா நோயாளிகள் எவரும் அடையாளம் காணப்படவில்லை. கடற்படை கொரோனா கொத்துகள் தொடர்பிலான அவதானத்தை குறைத்துக்கொள்ளவில்லை. கடற்படையினரின் வேலைத்திட்டம் காரணமாக கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்த முடிந்துள்ளது. கொரோனாத் தொற்றுக்குள்ளான கடற்படையினர் 80 வீதமானோர் முழுமையாக குணமடைந்துள்ளனர். ஒருவரேனும் ஆபத்தான நிலையில் இல்லை. கடற்படை சிப்பாய்களில் ஒருவரும் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்படவில்லை. கடந்த 45 நாள்களாக இலங்கையில் சமூக மட்டத்தில் எந்தவொரு கொரோனா நோயாளர்களும் இனங்காணப்படவில்லை- என்றார். (எ)

# இக்கட்டில்...

கட்சியின் சார்பில் வேட்புமனு வழங்கப்பட்டுள்ள பலர் கட்சியை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர் என்று தெரியவருகின்றது.
இதுவரை பத்துக்கும் மேற்பட்டவர்கள் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இருந்து விலகியுள்ளனர்.
இவர்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.
தேர்தல் வெற்றி தொடர்பில் ஏற்பட்ட அவநம்பிக்கையே விலகலுக்கான காரணம் என்றும், தேர்தலுக்கு பணம் செலவிடுவதில் பலனில்லை என்றும் நினைத்து அதிகமானோர் விலகுவதற்கு தீர்மானித்துள்ளனர் என்று கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.
இதேவேளை, அண்மையில் சஜித் தரப்பிலிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர மற்றும் முன்னாள் ஆளுநர் நிலூக்கா ஏக்கநாயக்க ஆகியோர் விலகியிருந்தனர். ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை பதவியில் அதிருப்தி அடைந்த குழுவினர், ஜனாதிபதி தேர்தலின் பின்னர் சஜித் தலைமையிலான புதிய கட்சி ஆரம்பித்து தனியாக பிரிந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(எ)

# விபத்தில் சிக்கியவர்...

இவர் தனது மகனுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, கடந்த 12ஆம் திகதி கோப்பாய் பாலத்தருகே விபத்துக்குள்ளானார். கடும் காற்றால் மோட்டார் சைக்கிள் நிலைதடுமாறி விபத்துக்குள்ளாகியிருந்தது.
இவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சைபெற்று வந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ26)

# ஹெரோயினுடன்...

னர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் 26, 28 வயதுடையவர் என்றும், அவர்க ளிடம் இருந்து 21 மில்லிகிராம், 25 மில்லிகிராம் ஹெரொயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட இவர்கள், நெல்லியடி பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

# வெளிநாட்டில்...

பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று ஐ.டி.எச். வைத்தியசாலையின் விசேட வைத்தியர் ஆனந்த விஜய விக்கிரம தெரிவித்துள்ளார். அதேவேளை, தற்போது ஐ.டி.எச். மருத்துவமனையில் 120 பேர் கொரோனா தொற்றுக்காக சிகிச்சைபெற்று வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# தேர்தல் விஞ்ஞாபனத்தை....

வைக்கப்பட்டு, அதனை தொடர்ந்து முன்னெடுக்க ஆதரவு கோரப்படும்.
அத்துடன், ஆசன மட்டத்திலான கூட்டங்களையே மொட்டு கட்சியினர் இம்முறை அதிகம் ஏற்பாடுசெய்யவுள்ளனர். ஜனாதிபதி, பிரதமர் உட்பட ஆளுங்கட்சியின் உயர்மட்ட பிரமுகர்கள் இந்தக் கூட்டங்களில் பங்கேற்பார்கள்.
சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படும். பிரமாண்டமாக நடைபெறும் பிரசார கூட்டங்களை கைவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (க-44)

# கடலட்டை...

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக மாபெரும் கண்டன பேரணி இடம்பெறவுள்ளது என்றும் அதில் வடமராட்சி கிழக்குக்கு உட்பட்ட 15 சங்கங்களையும், பிரதேச கிராம மட்ட அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள், மீனவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ள வேண்டும் என்றும் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் அழைப்பு விடுத்துள்ளது.
கிளிநொச்சி நீதிமன்றால் ஒரு மாவட்டத்தின் கடலட்டை தொழிலில், பிற மாவட்ட தொழிலாளர்கள் வாடி அமைத்து தங்கியிருந்து தொழிலில் ஈடுபட முடியாது என தடை உத்தரவு வழங்கப்பட்ட நிலையிலேயே கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதை கண்டித்தும் அனுமதியை இரத்துச்செய்யக் கோரியுமே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. (எ)

# தேர்தல் நெருங்குவதால் சுமந்திரனுக்கு புலிப் பாசம்

## சட்டத்தரணி மணிவண்ணன் சாட்டை

யாழ்ப்பாணம், ஜுன் 14
தமிழீழ விடுதலைப் புலிகளைக் கொச்சைப்படுத்தும் சுமந்திரனுக்கு, முன்னாள் போராளிகள் மீது திடீரென பொங்கிய பாசம் 'தேர்தல் நெருங்குகின்றது. தமிழ் மக்களை ஏமாற்ற நாங்கள் வந்துவிட்டோம்' என்ற கருத்தினையே வெளிப்படுத்துகின்றது இவ்வாறு தெரிவித்தார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் போராளிகளுக்கு ஆதரவு கொடுப்பது மற்றும் கோத்தாபய அரசுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். முன்னாள் போராளிகள் அரசியலுக்கு வரவேண்டும் என்றும், அவர்களுக்கு தமது கட்சியில் இடம் கொடுப்போம் என்றும், போராளிகள் தியாகங்கள் செய்தவர்கள் என்றும் சுமந்திரன் கூறியுள்ளார்.

அவருடைய இந்தக் கருத்துக்கள் ஒன்றை மட்டும் தெளிவாகச் சொல்லுகின்றன. தேர்தல் நெருங்கிவிட்டது ஆகவே நாங்கள் ஏமாற்றுவதற்காக வந்துவிட்டோம் என்பதே அந்தக் கருத்து. முன்னாள் போராளிகள் தியாகிகள் என்று சுமந்திரன் கூறுவது வேடிக்கையான விடயம். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தையோ அல்லது அவர்களின் அரசியல் போராட்டத்தையோ தான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சுமந்திரன் ஏற்கனவே கூறியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் வேலையில்லாத காரணத்தினால் போராட்டத்தில் இணைந்து கொண்டார்கள் என்று விடுதலை போராட்டத்தை கொச்சைப்படுத்திய அவர்தான் இன்று போராளிகளை அரசியலில் இணைத்துக் கொள்ளப் போகின்றேன் என்று கூறுகின்றார்.

இவ்வாறு பேசிய சுமந்திரன் இன்று போராளிகள் தொடர்பில் வெளியிடும் கருத்து தேர்தலில் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கான முனைப்பே தவிர வேறு ஒன்றும் இல்லை.

சுமந்திரன் போன்ற ஏமாற்றுப் பேர்வழிகள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும். இவர்களை அரசியல் அரங்கில் இருந்து மக்கள் அகற்ற வேண்டும் - என்றார். (ம-20)





## சங்கிலியனின் 401ஆவது நினைவு தினம் மன்னாரில்

மன்னார், ஜுன் 14
சங்கிலிய மன்னனின் 401ஆவது நினைவுதினம் மன்னார் கீரி கடற்கரையில் நேற்று கடைப் பிடிக்கப்பட்டது.
சங்கிலிய மன்னனின் சிரார்த்த கிரியைகளை விஜய பாபு குருக்கள் மேற்கொண்டிருந்தார். இந்த நிகழ்வில் ம.ஐங்கரசர்மா குருக்கள் மற்றும் சைவப்பிரமுகர்களும் கலந்து சங்கிலிய மன்னனின் நினைவு தினத்தைக் கடைப்பிடித்தனர். இந்த நிகழ்வினை தமிழ் தேசிய சைவ மக்கள் கட்சி ஏற்பாடு செய்திருந்தது. (ம-213)

## நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டோர் கைது

கிளிநொச்சி, ஜுன் 14
நீதிமன்றத்தத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 10 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.
கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குகள் காணப்பட்டு குறித்த வழக்குகளுக்கான திகதிகளில் சமூகமளிக்காதோருக்கு நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அதில் 5 பேர் திறந்த பிடியாணையிலும் 5 பேர் நாள் பிடியாணையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-6)

## மீண்டும் பஸ்சேவை ஆரம்பம்

பருத்தித்துறையிலிருந்து திக்கம், வதிரி நெல்லியடி ஊடாக யாழ்பாணம் வரை செல்லும் இலங்கை போக்குவரத்து பேருந்து சேவை நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளது.
நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தாக்கத்தால் இந்தச் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் மீண்டும் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம-422)

## முன்னாள் எம்.பி. சரவணபவன் நிதியுதவியில் மின் விளக்குகள் பொருத்தும் பணி ஆரம்பம்

கொடிகாமம், ஜுன் 14
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் நிதி உதவியில் மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் கைதடியிலிருந்து எழுதுமட்டுவாழ் வரை வீதி மின் விளக்குகள் பொருத்துவதற்காக 35 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தப் பணிகள் அண்மையில் இடம்பெற்றன. எனினும், கொரோனா பெருந்தொற்றை அடுத்து பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.
தற்போது நிலைமை ஓரளவு சுமுகமானதை அடுத்து மின் விளக்குகள் பொருத்தும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-159)

## கிளிநொச்சியில் 4,000 குடும்பங்களுக்கு இடர்கால நிதியுதவி வழங்கப்படவில்லை

கிளிநொச்சி, ஜுன் 14
கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னமும் சுமார் 4 ஆயிரம் குடும்பங்களுக்கு இடர்கால இரண்டாம் கட்ட கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் ஆரணி தவபாலன் தெரிவித்தார்.
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாதம் 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.
அதன் இரண்டாம் கட்ட கொடுப்பனவு எதொடர்பாக கிளிநொச்சி மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் ஆரணி தவபாலனிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: சமுர்த்தி திணைக்களத்தின் ஊடாக நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஏற்கனவே முதல்கட்ட நிதி வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இரண்டாம் கட்ட நிதி வழங்கப்பட்டு வருகின்றது. இரண்டாம் கட்டக் கொடுப்பனவு கடந்த ஒரு மாதகாலமாக வழங்கப்பட்டு வருகின்றது. எனினும் கிளிநொச்சியில் சுமார் 4 ஆயிரம் குடும்பங்களுக்கு இரண்டாம்கட்ட கொடுப்பனவு வழங்கப்படவில்லை. நிதி படிப்படியாகவே விடுவிக்கப்படுகின்றது. விரைவில் மக்களுக்கு இரண்டாம்கட்டத் தொகை வழங்கப்படும் - என்றார். (ம-6)





## சாவகச்சேரி பகுதியில் பனம்பொருள் அங்காடி!

சாவகச்சேரி, ஜுன் 14
சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினர் பிரதேச பனைசார் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் பனம் பொருள் அங்காடியினை சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் திறந்துள்ளனர்.
சங்கத் தலைவர் தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இராமநாதன் சுரேஸ் கலந்து கொண்டார். (ம-9)

# கிளி. கண்டாவளையில் பெரும் மணல் அகழ்வு!

## களத்தில் குதித்த கிராம அலுவலர்கள் பிரதேச செயலருக்கு அறிக்கை

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் தொடரும் மண் அகழ்வு தொடர்பில் அந்தப் பிரதேசத்துக்குட்பட்ட கிராம அலுவலர்களால் பிரதேச செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிப்பிக்கப் பட்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பெரியகுளம் பகுதியில் இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள கனகராயன் ஆற்றுப்படுக் கையில் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டவிரோத மணல் அகழ்வினால் இயற்கை வளம் முறையற்ற வகையில் அழிக்கப்படுவது தொடர்பில் கிராம அலுவலர்களால் பிரதேச செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. அதையடுத்து பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக குறித்த பகுதி கிளிநொச்சி விசேட பொலிஸ் குழுவால் முற்றுகை



யிடப்பட்டிருந்தது. அந்தப் பகுதியை கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்.

அவருடன் கண்டாவளை பிரதேச செயலர் கிராம அலுவர் உள்ளிட்ட பலரும் சென்றிருந்தனர். இவ்வாறு பெரிய இயற்கை வளச்சுரண்டல் இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் கள ஆய்வு மேற்கொள்ளுமாறு பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து பிரதேச செயலாளரினால் கிராம அலுவலர் களிடம் அறிக்கை கோரப்பட்டிருந் தது. அதையடுத்து நேற்றுமுன்தினம் குறித்த பகுதியில் ஆங்காங்கே விற்பனைக்குத் தயார் நிலையில் இருந்த 200 ரக்ரர் லோட்டுக்கு அதிகளவான மணல் மேடுகள் அடையாளம் காணப்பட்டன. குறித்த மணல் திட்டிகள் தனியார் காணிகளிலும், பொது இடங்களிலும் விற்பனைக்குத் தயாரான நிலையில் குவிக்கப்பட்டிருப்பது தொடர்பில் பிரதேசத்திற்குப் பொறுப்பான கிராம அலுவர்களால் அறிக்கை தயாரிக் கப்பட்டு கண்டாவளை பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட் டுள்ளது. அவற்றைக் கட்டுப்படுத் துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான வேலைத்திட் டங்கள் மாவட்டச் செயலகத்தினா லும், பிரதேச செயலகத்தினாலும் விரைவுபடுத்தப்பட்டுள்ளது. கண்டாவளை, புளியம்பொக்க ணைப்பகுதிகளில் இவ்வாறு குவிக் கப்பட்டுள்ள மணல் கும்பிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக கண்டாவளை பிரதேச செயலர் த.பிருந்தாகரன் தெரிவித்தார்.(ப-6)

## படகிலிருந்து தவறி வீழ்ந்தவர் உயிரிழப்பு

கொழும்பு,ஜூன் 14

பொலன்னறுவை, அலுத்வெவ நீர்த்தேக்கத்தில் படகுச் சவாரி செய்வதற்காக சென்ற ஒருவர், படகிலிருந்து தவறி வீழ்ந்து உயிரி ழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள் ளது. நீர்த்தேக்கத்தில் படகுச் சவாரி செய்வதற்காக சிலர் சென்றிருந்த நிலையில், அதிலொருவர் தவறி வீழ்ந்துள்ளதாக, பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. தவறி வீழ்ந்தவர், பொலன்னறுவை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். பொலன்னறுவை, வீரபெதேச பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (க)

## கூட்டுத் தொழுகைக்கு அனுமதி

கொழும்பு,ஜூன் 14

வழமையான ஐந்து வேளை மற்றும் ஜும்ஆ கூட்டுத் தொழுகைகள் உள்ளிட்ட விசேட கூட்டுத் தொழுகைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினால் வழங்கப் பட்ட அனுமதியை அடுத்து, அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை வக்ப் சபையின் தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தெரிவித்தார்.

நிகாஹ் (திருமணம்) மஜ்லிஸ் உள்ளிட்ட கூட்டு நிகழ்வுகளையும், தனிநபர் இடைவெளி பேணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், ஏற்கனவே இது தொடர்பில் வக்ப் சபையால் வெளியிடப்பட்ட விதிமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் சுகாதார அமைச்சின் வழிகாட் டல்களைப் பேணுவது கட்டாயம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதன் அடிப்படையில் சுமார் 3 மாதங்களின் பின்னர் முஸ்லிம்கள் பள்ளிவாசல்களில் கூட்டாக நிறைவேற்றும் தொழுகைகள் நடைபெறுகின்றன. (க)




மட்டக்களப்பு மேற்கில் உயர்தரம் பயிலும் 10 மாணவர்களுக்கு ஜீவஊற்று அன்பின்கரம் அமைப்பால் துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-46)

## கொரோனா எதிரொலி 15,000 பேர் தொழிலிழப்பு

கொழும்பு, ஜூன் 14

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தொழிலை இழந்த 15 ஆயிரம் பேரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றால் மூடப்பட்ட அனைத்து நிறுவனங்களும் அரசின் ஆலோசனைக்கு அமைவாக தற்போது தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன.

எனினும், சுமார் மூன்று மாதங்கள் மூடப்பட்டிருந்த நிறுவனங்களில் மீளச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் போது, பெருந்திரளான ஊழியர்கள் தொழிலை இழந்துள்ளனர் என்று தொழில் ஆணையாளர் நாயகம் ஏ.ஜே. விமலவீர தெரிவித்தார்.

அவர்களில் சுமார் 15 ஆயிரம் பேரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அனைவரினதும் தொழில் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான அதிகபட்ச நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கமைவாக தொழில் வழங்குநர்கள், தொழிலாளர்கள் மற்றும் தொழில் திணைக்களம் ஆகிய தரப்புகள் இணைந்து பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் கலந்துரையாட வேண்டும் எனவும் தொழில் ஆணையாளர் நாயகம் ஏ.ஜே. விமலவீர வலியுறுத்தியுள்ளார். (க)




## திருகோணமலையில் 30 பேருக்கு விவசாயக்கன்றுகள் வழங்கல்!

திருகோணமலை, ஜூன் 14

தமிழர் புலம்பெயர் அமைப்பின் கீழ் இயங்கும் பசுமை இல்லம் தொண்டு நிறுவனம் திருகோணமலையில் 30 பயனாளிகளுக்கு ஆயிரத்து 200 விவசாயக் கன்றுகளை நேற்று வழங்கியது.

திருகோணமலை மாவட்ட பசுமை இல்லத்தின் ஒருங்கிணைப்பாளர் கா.வினோத்குமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் திருகோணமலை விவசாய திணைக்களப் போதானாசிரியர் அருணன், பசுமை இல்லம் நிர்வாக உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ம)

## மிருகக்காட்சி சாலைகள் மீண்டும் நாளை திறப்பு

கொழும்பு, ஜூன் 14

நாட்டில் உள்ள சகல மிருகக்காட்சிசாலைகளும் நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளன.

சுகாதார அமைச்சின் அறிவுரைகளையும், பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைகளையும் பின்பற்றி மிருககாட்சி சாலைகளை திறக்கவுள்ளதாக சுற்றுச்சூழல் மற்றும் வன விலங்குகள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார். நாட்டில் நிலவும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சகல மிருக காட்சிசாலைகளும் தற்காலிகமாக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(க)

# சர்வதேச கண்காணிப்பாளர்கள் இல்லாமல் பொதுத்தேர்தலா?

### தனிமைப்படுத்தல் விதிகளால் இவ்வாறானதொரு நெருக்கடி

கொடிகாமம், ஜூன் 14

இலங்கையின் பொதுத்தேர்தல் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அந்தப் பொதுத்தேர்தலில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் செயற்பாடுகள் அனைத்தும் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவித்துள்ளார். அதனடிப்படையில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு ஏதுநிலைகள் காணப்படுகின்றன. இருப்பினும் வெளிநாடுகளிலிருந்து வருகைதரும் இராஜதந்திரிகள் உள்ளிட்ட அனைவரும் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதோடு தனிமைப்படுத்தல் விதிமுறைகளையும் பின்பற்றவேண்டுமென அரசு அறிவித்துள்ளது.

ஆகவே சர்வதேச கண்காணிப்பாளர்கள் நாட்டுக்குள் வருகை தரும்போது அவர்களுக்கு கொரோனா சட்ட விலக்களிக்கப்படாதிருக்குமாயின் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுவதில் சிக்கலான நிலைமைகளே உருவாகும்.

இதேவேளை, இம்முறை தேர்தல் கண்காணிப்பு பணிகளில் பொதுநலவாய அமைப்பு கண்காணிப்பாளர்கள், ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள், மற்றும் தென்கொரியா வைச் சேர்ந்த அன்பிறில் அமைப்பினைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் வருகைதருவார்கள் என்ற நம்பிக்கை உள்ளதாக ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்டஜீவன் ஹூல் தெரிவித்துள்ளார்.

இந்த தரப்பினருடன் ஏற்கனவே ஒப்பந்தங்கள் கைச்சாத்தியுள்ள நிலையில் அவர்கள் குறிப்பிட்ட சிலரையாவது அனுப்புவார்கள் என்று கூறிய அவர் அவ்வாறு சர்வதேச கண்காணிப்பாளர்கள் இல்லையென்றால் பெரியளவில் சட்டமீறல்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். (ம-44)



ஓட்டோ சங்கத்தின் தலைவர்

## படுகொலையை கண்டிக்கின்றார் கரு ஜயசூரிய!

கொடிகாமம், ஜூன் 14

தனது மக்களுக்காகக் குரலெழுப்பிய ஓர் உண்மையான தொழிற்சங்கவாதி படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் கடும் கண்டத்திற்குரியது எனத் தெரிவித்திருக்கும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, நாட்டில் இடம்பெறும் இத்தகைய ஈவிரக்கமற்ற செயற்பாடுகளுக்கு எதிராக மக்கள் அனைவரும் ஒன்றிணையவேண்டும் என்றும் அறைகூவல் விடுத்துள்ளார்.

வாகன குத்தகை வழங்கல் மாபியா தொடர்பில் வெளிப்படுத்திய தேசிய முச்சக்கர வண்டி சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்தன கடந்த செவ்வாய்கிழமை வாகனங்களைக் குத்தகைக்கு வழங்கும் நிதி நிறுவனம் ஒன்றின் முன்னால் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்துக்குக் கண்டனம் வெளியிட்டு தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே மேற்படி கண்டனத்தைத் தெரிவித்துள்ளார் கரு ஜயசூரிய.

சுனில் ஜயவர்தன கொலைசெய்யப்பட்ட சம்பவம் மிகுந்த கண்டனத்துக்குரியதாகும். அவர் தன்னுடைய மக்களின் பக்கம் தொடர்ந்தும் நின்ற உண்மையான ஓர் தொழிற்சங்கவாதி ஆவார். அவர் உதவி தேவைப்பட்ட மற்றுமொரு முச்சக்கர வண்டி சாரதிக்காக உதவ முற்பட்டதுடன், அரசு வழங்குமாறு உத்தரவிட்டுள்ள உரிய தள்ளுபடிகளை அல்லது சலுகைகளை வழங்குமாறே கோரினார். இவருடைய படுகொலை போன்ற மிகமோசமான ஈவிரக்கமற்ற சம்பவங்களுக்கு எதிராக மக்கள் ஒன்றுபட வேண்டியது அவசியமாகும் என்று அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார் கரு ஜயசூரிய. (ம)

## தொழிற்தகமை பாடநெறிக்கு மாணவர் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஜூன் 14

உயர்தரத்தின் தேசிய தொழிற்தகைமை பாடநெறியின் கீழ் தரம் 12க்கு மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் அனைத்து வலயக்கல்விப் பணிமனைகளை உள்ளடக்கும் வகையில் 423 பாடசாலைகளில் மாணவர்கள் உள்ளீர்க்கப்படவுள்ளனர். சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களும் இதன்மூலம் நன்மையடைய முடியும்.

தகுந்த பாடசாலையைத் தெரிவுசெய்வதற்கான சந்தர்ப்பமும் மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடநெறியின் கீழ் உடற்கல்வி மற்றும் விளையாட்டு, கைவினை கலை, உள்ளக வடிவமைப்பு, அரங்கற்கலை, குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு, பெருந்தோட்ட பயிர்ச்செய்கை உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி மற்றும் கிராபிக் வடிவமைப்பு உள்ளிட்ட 26 பாடநெறிகள் அடங்குகின்றன.

இது குறித்த மேலதிக தகவல்களை 011 22787136 அல்லது 011 2786746 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து பெற்றுக் கொள்ள முடியும். www.moe.gov.lk எனும் கல்வி அமைச்சின் இணையத்தள முகவரிக்குப் பிரவேசித்தும் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)



## மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்தில் இரண்டு விமானங்கள் தரையிறங்கின!

கொழும்பு, ஜூன் 14

கொரோனா வைரஸ் பரவலையடுத்து சுமார் மூன்று மாத காலமாக மூடப்பட்டிருந்த மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் இரண்டு விமானங்கள் தரையிறங்கியுள்ளன.

தென்னாபிரிக்காவில் இருந்துவந்த விமானமொன்று கடந்த வெள்ளிக்கிழமையும், அஸர்பையானில் இருந்து புறப்பட்ட விமானமொன்று நேற்று சனிக்கிழமையும் மத்தளவில் ராஜபக்ஷ விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளன. (ம)

## புதுப்பொலிவுடன் தெருமூடிமடம்

வடமராட்சி, ஜூன் 14

இலங்கையில் எஞ்சியுள்ள ஒரேயொரு தெருமூடி மடம் பருத்தித்துறையில் காணப்படுகிறது. அது தற்போது புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த மடம் 1898- 1901ம் ஆண்டு காலப்பகுதியில் வாழ்ந்த வைத்தீஸ்வரக்குருக்களின் தகப்பனார் பஞ்சாட்சரக்குருக்களால் அமைக்கப்பட்டது. தெருவின் இருபக்கமும் பொழிகல்லுத் திண்ணைகள் காணப்படுகின்றன. தூண்களில் தெருமூடி மடம் கட்டுமானத்துடன் தொடர்பான பிராமண குடும்பத்தினரின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

மேற்புறம் தெருவை மூடி ஓரோடுகளால் வேயப்பட்ட கூரை காணப்பட்டது. தற்போது தட்டை ஓடுகள் போடப்பட்டுள்ளன. அந்தக்காலத்தில் தெருவில் நடைசாரியாகவும்,மாட்டு வண்டிகளிலும் பயணம் செய்வோர் இளைப்பாறிச்செல்ல இந்த மடம் உதவியாக இருந்தது. இந்த தெருமூடி மடத்தின் தெற்குப் பக்கச் சுவரில் வாசலிடப்பட்டு கதவும் இருக்கிறது.

இந்த வாசல் தெற்குப்புறமாக இருந்த பிராமணரின் வீட்டுடன் தொடர்புடையதாக இருந்துள்ளது. இராக்காலத்தில் இம்மடத்து திண்ணையில் தங்கிச்செல்லும் வழிப்போக்கர்களுக்கு சாப்பாட்டு வசதிகளைச் செய்து கொடுக்க பிராமணர் இந்த வாசலைப் பயன்படுத்தினார். இந்த வீட்டில் பிராமணரால் சமஸ்கிருத வகுப்புகளும் நடத்தப்பட்டுள்ளன. இந்த தெருமூடிமடத்தின் அருகில் இருக்கும் சிவன் கோவில் வீதிக்கிணறு, தண்ணீர்த்தொட்டி, ஆவுரோஞ்சிக் கல் என்பன மனிதர் குடிக்கவும் தொட்டிகளில் வண்டில் மாடுகள் தண்ணீர் குடிக்கவும், ஆவுரோஞ்சிக் கல்லில் மாடுகள் உரசி நமைச்சலைப்போக்கவும் மிகவும் கருணையோடு அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## இடர்நேர இடப்பெயர்வில் எவை இடம்பெறவேண்டும்

### உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

கொடிகாமம், ஜூன் 14

பருவமழைக்கு தயாராகும்போது இடர் நேரத்தில் இடம்பெயர்வதற்காக தயார் செய்யப்படும் பொதியில் எவற்றை பொதி செய்ய வேண்டும் என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

தண்ணீர் போத்தல்கள், சிறிய டோர்ச் லைட், சுகாதார உபகரணங்கள், சமூர்த்தி முத்திரை அல்லது ஏனைய ஆவணங்கள், தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, வங்கி கணக்குப் புத்தகம், உலர் உணவுகள், குழந்தைகளுக்கான உணவுகள் என்பன அந்தப் பொதியில் இடம்பெற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-159)

# பி.சி.ஆர். சான்றிதழ் பெறுதல் சுற்றுலாவிகளுக்கு அவசியம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். பி.சி.ஆர் பரிசோதனை மூலம் அவர்களுக்குக் கொரோனாத் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே நாட்டுக்குள் அனுமதிக்கப்படுவார்கள்' என்று சுற்றுலாத்துறைக்கு பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் வெளிநாடுகளில் உள்ளவர்களை,



தனிமைப்படுத்தல் சட்டத்திட்டத்துக்கு உட்பட்ட வகையில் இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும். இப்பணி முடிவடைந்த பின்னரே சுற்றுலாப் பயணிகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையம் திறக்கப்படும். அந்தத் திகதி ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னதாகக்கூட இருக்கலாம்.

சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவதற்கு முன்னர் பி.சி.ஆர் பரிசோதனை செய்திருக்கவேண்டும். இங்கு வந்த பின்னரும் அந்தச் சோதனை நடத்தப்படும். முடிவு வெளிவரும்வரை நாம் முன்மொழியும் ஹோட்டலிலேயே அவர்கள் தங்கியிருக்கவேண்டும்.

கொரோனா தொற்றுக்கு உள்ளாகவில்லை என்பது பரிசோதனையில் உறுதிப்படுத்தப்படுமானால் அவர்கள் சுற்றுலா செல்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள். எனினும், சுகாதார பரிசோதகர்கள் ஊடாக கண்காணிப்பு இடம்பெறும்' - என்றார். (ம-44)

## இடுகம நிதியத்தின் இருப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 14

கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் பணிகளுக்கென ஜனாதிபதியினால் சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியமான இடுகம நிதியத்தின் இருப்பு ஆயிரத்து 378 மில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது. இந்நிலையில் ஹெலரணவிரு படையணியின் அநுராதபுர மாவட்ட அலுவலகத்தால் 2 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் இடுகம நிதியத்துக்கு நன்கொடை செய்யப்பட்டது.

மேலும் சில தனியார் நிறுவனங்களும் நிதியத்திற்கு நன்கொடை செய்துள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. இடுகம நிதியம் தொடர்பில் 0112 320 880 அல்லது 0112 354 340 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ப)

## ஏ/எல் பரீட்சையை பிற்போட வேண்டும்

ரவி கருணாநாயக்க கோரிக்கை

கொழும்பு, ஜூன் 14

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை அரசு பிற்போடவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இந்தப் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்தப்படுவதற்கு மீள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. பாடவிதானங்கள் நிறைவுசெய்யப்படாத நிலையில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதில் மாணவர்களுக்குப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அதனால் உயர்தரப் பரீட்சைகளை நவம்பர் அல்லது டிசெம்பர் மாதத்துக்கு ஒத்தி வைக்கவேண்டும்- என்றார்.

அதேவேளை அனைத்து பல்கலைக்கழகங்களும் இறுதியாண்டு பரீட்சைகளுக்காக எதிர்வரும் 22ஆம் திகதி மீள்திறக்கப்படவுள்ளன. பரீட்சைகள் ஓகஸ்ட் 15ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்கப்படவேண்டும் என்று உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (எ)

## கொரோனாவால் தாய்மார் பாதிப்பு குழந்தைகளுக்குத் தொற்று இல்லை

கொழும்பு, ஜூன் 14

உலக நாடுகளிடையே பரவிவரும் கொரோனா தொற்றால் குழந்தை பிரசவித்த தாய்மார்கள் அதிக அளவு பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் பிறந்ததில் அதிக குழந்தைகளுக்கு கொரோனா பாதிப்பு இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தொற்று பாதித்த தாய்மார்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பதனால் தொற்று பரவி விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. அதற்கு பதிலளிக்கும் வகையில், உலக சுகாதார அமைப்பு குழந்தைகளுக்கு தாய்பால் கொடுப்பதனால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது. அவ்வாறு தாய்ப்பால் கொடுக்கவில்லை என்றால் குழந்தைகளைப் பல வகையான நோய்கள் தாக்குவதற்கான அபாயம் உள்ளது எனத் தெரிவித்துள்ளது. குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்காமல் வரும் ஆபத்தை விட தாய்ப்பால் கொடுத்து பரவும் கொரோனா சிறிய ஆபத்துதான்.

எனவே தொற்றினால் பாதிக்கப்பட்ட தாய்மார்கள் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கலாம் என்றும் அதற்கான ஊக்கத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. (ப)

## 150 இராணுவத்தினர் இன்று குருதித்தானம்

மன்னார், ஜூன் 14

நாட்டில் உள்ள குருதி வாங்கிகளில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகை யில், அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் தள்ளாடி 54 ஆவது இராணுவ படைப்பிரிவின் ஏற்பாட்டில், தள்ளாடி படை முகாமில் குருதித்தான முகாம் இன்று நடத்தப்பட்டது. அநுராதபுரம் போதனா மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் வருகையுடன் குருதி சேகரிக்கப்பட்டது. சுமார் 150 இராணுவத்தினர் குருதித் தானம் செய்தனர். (க-56)

### புதினம் தெரியுமோ?

குதிச்சார். அதெப்பிடி எங்கட பகுதிக்க தமிழர் இல்லாத செயலணி அமைக்க முடியும்? நான் அரசாங்கத்தோட கதைச்சு அந்தச் செயலணிக்குள்ள தமிழ் ஆக்களைப் போடுவிப்பன் எண்டு பகிரங்கமாக் கருத்தும் சொன்னார். ஆனால், இப்பிடி இவர் கதைச்சது கோத்தாவின்ர காதுக்கும் போட்டுது. உடன அரசியல்வாதியைக் கூப்பிட்டு கோத்தா கதைச்சிருக்கிறார். அப்ப இருக்கிற தெண்டா ஒழுங்கா இருக்கேணும்.

அதை விட்டிட்டு தேவையில்லாத வேலை பார்க்கிறதெண்டா அரசாங்கத்தை விட்டே போகலாம் எண்டு செம 'டோஸ்' குடுத்திருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலில் குறித்த அரசியல்வாதி ஒரு லட்சம் வாக்குகளை எடுத்துத் தருவன் எண்டு கோத்தாவுக்குச் சொல்லிப்போட்டு, 20 ஆயிரம் வாக்குகள்தான் எடுத்துக் குடுத்தவர். கோத்தாவுக்கு அந்தக் கடுப்பு இன்னும் தீரேலை. அதுக்குப் பிறகு இந்த அரசியல்வாதியை கோத்தா பெரிசா மதிக்கிறதும் இல்லை. அதாலதான் இப்பிடி அரசியல்வாதியை கோத்தா, வாங்கு வங்கெண்டு வாங்கியிருக்கிறார். ஜனாதிபதி பேசினதை வெளியில சொல்லவும் முடியாமல், உள்ளுக்க மெல்லவும் முடியாமல் தன்ர பாட்டில 'வீணையை' எடுத்து வாசிச்சுக் கொண்டிருக்கிறாராம் அந்த அரசியல்வாதி.

## கொவிட் நிதியத்துக்காக ஆசிரியர்களின் சம்பளம்

உயர் நீதிமன்றில் வழக்கு

மட்டக்களப்பு, ஜூன் 14

கிழக்கு மாகாண அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பளத்தைப் பிடித்தமைக்கு எதிராக உயர் நீதிமன்றில் இலங்கை ஆசிரியர் சங்கம் வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளைச் செயலாளர் பொ.உதயரூபன் தெரிவித்துள்ளதாவது:

கிழக்கு மாகாணத்தில் கொவிட் 19 நிதியத்துக்கு அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் அனுமதியின்றி சம்பளத்திலிருந்து குறிப்பிட்ட தொகை கழிக்கப்பட்டமை அவர்களின் அடிப்படை உரிமை மீறும் செயலாகும். அதனை எதிர்த்து இலங்கை ஆசிரியர் சங்கம் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

கடந்த மே மாதம் சம்பளப் பட்டியலிலிருந்து கிழக்கு மாகாணத்தி லுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒரு நாள் சம்பளத்தின் குறிப்பிட்ட தொகை பிடிக்கப்பட்டிருப்பதோடு, மூடப்பட்டிருந்த பாடசாலைகள் சுகாதார விதி முறைகளுக்கு முரணாக சில வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அறிவுறுத்தலுக்கமைய திறக்கப்பட்டு விருப்பமின்றி அனுமதி பெறப்பட்டுள்ளதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அதனால் இலங்கை ஆசிரியர் சங்கம் அடிப்படை உரிமை வழக்கொன்றை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கில் கிழக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர், மாகாண கல்விச் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பொர்ணாண்டோ, பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை செயலாளர் பொ.உதயரூபன் ஆகியோர் மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்- என்றார்.(க-47)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 14.06.2020 இல் வெளியிடப்பெற்றது.